සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 T I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

| | | |
|---|---|---|
| දෙවන බස - දෙමළ I, II | | පැය තුනයි |
| இரண்டாம் மொழி - தமிழ் I, II | | மூன்று மணித்தியாலம் |
| Second Language - Tamil I, II | | *Three hours* |

## இரண்டாம் மொழி - தமிழ் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**සැලකිය යුතුයි :**

(i) සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න. මෙම පත්‍රය සඳහා මුළු ලකුණු **40**කි.
(ii) අංක **1** සිට **40** තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
(iii) ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (×) ලකුණ යොදන්න.
(iv) එම පිළිතුරු පත්‍රයේ පිටුපස දී ඇති අනෙක් උපදෙස් ද සැලකිල්ලෙන් කියවා, ඒවා පිළිපදින්න.

**Note:**

(i) Answer **all** questions. Total marks for this paper is **40**.
(ii) In each of the questions **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which you consider is **correct** or **most appropriate**.
(iii) **Mark a cross (×) on the number corresponding to your choice in the answer sheet.**
(iv) *Further instructions are given on the back of the answer sheet. Follow them carefully.*

---

- **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் **தொடக்கத்தில்** தரப்பட்டுள்ள சொல்லுக்குரிய **ஒத்தகருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
  **1** සිට **5** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට සමාන පදය තෝරන්න.
  In questions **1** to **5**, select the **synonym** for the word given at the **beginning**.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மன்னர் : | (1) மந்திரி | (2) அரசர் | (3) மக்கள் | (4) தலைவர் |
| 2. | அந்நியர் : | (1) உறவினர் | (2) நண்பர் | (3) பிறர் | (4) சகோதரர் |
| 3. | கழனி : | (1) வயல் | (2) புல் | (3) அரிசி | (4) தானியம் |
| 4. | சாலை : | (1) வண்டி | (2) ஆகாயம் | (3) விமானம் | (4) பாதை |
| 5. | கவி : | (1) புலவன் | (2) புரவலன் | (3) புத்திமான் | (4) அந்தணன் |

- **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களில் **தொடக்கத்தில்** தரப்பட்டுள்ள சொல்லுக்குரிய **எதிர்க்கருத்துள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
  **6** සිට **10** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට විරුද්ධ පදය තෝරන්න.
  In questions **6** to **10**, select the **antonym** for the word given at the **beginning**.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | ஏற்றுமதி : | (1) வருமதி | (2) கொடுமதி | (3) செல்மதி | (4) இறக்குமதி |
| 7. | ஒற்றுமை : | (1) அறியாமை | (2) பொல்லாமை | (3) வேற்றுமை | (4) ஒழியாமை |
| 8. | ஒத்தஇனம் : | (1) பல்லினம் | (2) கூட்டினம் | (3) தன்னினம் | (4) வேற்றினம் |
| 9. | மகிழ்ச்சி : | (1) மலர்ச்சி | (2) துக்கம் | (3) ஆரவாரம் | (4) இன்பம் |
| 10. | அகம் : | (1) புறம் | (2) தூரம் | (3) அண்மை | (4) சேய்மை |

[பக். 2 ஐப் பார்க்க / 2 වැනි පිටුව බලන්න /see page 2

108045

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

- **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள **வெற்றிடத்தை நிரப்புவதற்குப்** பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்க.
**11** සිට **15** තෙක් ප්‍රශ්නවල ඇති **හිස්තැන් සම්පූර්ණ කිරීමට** සුදුසු පදය පහත දී ඇති වචන අතුරෙන් තෝරන්න.
In questions **11** to **15**, choose the correct word to **fill in the blanks** from those given below.

11. ஆறு ............................ என ஓடியது.
 (1) பறபற (2) கலகல (3) சலசல (4) படபட

12. நாய் குரைக்கும் என்பது போல பல்லி ............................ .
 (1) கூச்சிடும் (2) கீச்சிடும் (3) கத்தும் (4) சொல்லும்

13. பூங்காவில் ............................ வீசிய குளிர்காற்று எமக்குச் சுகம் தந்தது.
 (1) பளிச்சென்று (2) சோவென்று (3) கணீரென்று (4) சில்லென்று

14. கமலா நாயுடன் ............................ உலாவச் சென்றாள்.
 (1) கடற்கரை (2) கடற்கரையை (3) கடற்கரையில் (4) கடலில்

15. 'எண்ணெ' என்ற பேச்சு மொழியின் சரியான வடிவம் ............................ .
 (1) எண்நெய் (2) எண்ணெய் (3) எண்னெய் (4) என்னை

- **16** தொடக்கம் **18** வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் வாக்கியங்களை, **அறிவித்தல், அறிவுறுத்தல், தகவல், கட்டளை** என்பவற்றுள் எதற்குரியது எனத் தெரிவுசெய்க.
**16** සිට **18** තෙක් ප්‍රශ්නවල ඇතුළත් වාක්‍ය, **නිවේදනය, උපදෙස්, තොරතුරු,** විධාන යන ඒවා අතුරෙන් කවරකට අයත් දැයි තෝරන්න.
Out of the categories, **announcements, instructions, information** and **orders,** select to which category the sentences given in questions **16** to **18** belong.

16. சிரமதானத்தில் யாவரும் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
 (1) அறிவித்தல் (2) கட்டளை (3) தகவல் (4) அறிவுறுத்தல்

17. பாடசாலை ஒழுங்கு விதிகளை மாணவர்கள் பின்பற்ற வேண்டும்.
 (1) அறிவித்தல் (2) கட்டளை (3) தகவல் (4) அறிவுறுத்தல்

18. தோடம்பழத்தில் விற்றமின் 'சீ' அதிகமுள்ளது.
 (1) தகவல் (2) அறிவித்தல் (3) கட்டளை (4) அறிவுறுத்தல்

- **19** தொடக்கம் **21** வரையுள்ள வினாக்களின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய பொருத்தமான **வினாவைத்** தெரிவுசெய்க.
**19** සිට **21** තෙක් ප්‍රශ්න සඳහා මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට සුදුසු **ප්‍රශ්නය** තෝරන්න.
In questions **19** to **21**, pick out the most suitable **question** to get the answer given at the beginning.

19. எனது நிறம் மங்கி விட்டது.
 (1) யாரால் நிறம் மங்கி விட்டது ?
 (2) யாருக்கு நிறம் மங்கி விட்டது ?
 (3) யாரினது நிறம் மங்கி விட்டது ?
 (4) எவரிடம் நிறம் மங்கி விட்டது ?

20. நாயுடன் பூனை விளையாடியது.
 (1) நாயுடன் யார் விளையாடியது ?
 (2) நாயுடன் எது விளையாடியது ?
 (3) பூனையுடன் எது விளையாடியது ?
 (4) நாய் பூனையுடன் விளையாடியதா ?

21. குமாரிக்கு நன்றாகத் தமிழும் சிங்களமும் பேசத் தெரியும்.
 (1) யாருக்கு நன்றாகத் தமிழும் சிங்களமும் பேசத் தெரியும் ?
 (2) யாரினால் நன்றாகச் சிங்களமும் தமிழும் பேசத் தெரியும் ?
 (3) யாரால் நன்றாகத் தமிழும் சிங்களமும் பேசத் தெரியும் ?
 (4) யார் நன்றாகச் சிங்களமும் தமிழும் பேசுவார் ?

[பக். 3 ஐப் பார்க்க / 3 වැනි පිටුව බලන්න /see page 3

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

- 22 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்களில் **தொடக்கத்தில்** தரப்பட்டுள்ள சொல்லுடன் எவ்விதத் **தொடர்பும் இல்லாத** சொல்லைத் தெரிவுசெய்க.
 **22** සිට **24** තෙක් ඇති ප්‍රශ්නවල මුලින් දී ඇති පදයට කිසිදු ආකාරයකින් **සම්බන්ධයක් නොමැති** වචනය තෝරන්න.
 In questions **22** to **24**, select the word which is completely **unrelated** to the word given at the **beginning**.

22. தாய் : (1) மாதா (2) அன்னை (3) ஆண் (4) அம்மா

23. மரம் : (1) நாற்று (2) கன்று (3) கிளை (4) புத்தகம்

24. சந்திரன் : (1) இந்திரன் (2) மதி (3) திங்கள் (4) நிலா

- 25 தொடக்கம் 27 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள சொற்களின் வரிசையில் **எழுத்துப் பிழையுள்ள சொல்லைத்** தெரிவுசெய்க.
 **25** සිට **27** තෙක් ප්‍රශ්නවල එක් එක් වචන පේළියේ වැරදි ලෙස අකුරු යෙදී ඇති වචනය තෝරන්න.
 In questions **25** to **27**, select the word that is **incorrectly spelt** in the following rows of words.

25. (1) விடுதலை (2) ஆணந்தம் (3) பனங்கட்டி (4) பாடசாலை

26. (1) பச்சையரிசி (2) பயற்றங்காய் (3) பறுப்பு (4) மிருகம்

27. (1) சேவகன் (2) பனியாள் (3) உருவம் (4) ஆசிரியர்

- 28 தொடக்கம் 32 வரையான வினாக்களில் உள்ள **வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான** சொல்லை கீழே உள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்க.
 **28** සිට **32** තෙක් ප්‍රශ්නවල හිස්තැන් පිරවීම සඳහා වඩාත් ම සුදුසු වචනය පහත දී ඇති වචන අතුරෙන් තෝරන්න.
 In questions **28** to **32**, choose the **most appropriate** word **to fill in the blanks** from those given below.

28. மகாபராக்கிரமபாகு ............................ ஆண்டான்.
 (1) இலங்கையில் (2) இலங்கையை (3) இலங்கைக்கு (4) இலங்கையால்

29. நமது நாடு ............................ சுதந்திரம் பெற்றது ?
 (1) எப்போது (2) எதனை (3) எங்கே (4) எத்தனை

30. நானும் குமாரும் பாடசாலைக்குப் ............................ .
 (1) போவான் (2) போனேன் (3) போனோம் (4) போகும்

31. காற்றுள்ள போதே ............................ .
 (1) பறந்து செல் (2) நடந்து செல் (3) எடுத்துக் கொள் (4) தூற்றிக் கொள்

32. பசுக் கன்று தேர்ச்சில்லில் அகப்பட்டு ............................ .
 (1) சென்றது (2) நடந்தது (3) இறந்தது (4) படுத்தது

- 33 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலிற் கொடுக்கப்பட்டுள்ள (அ), (ஆ) என்னும் இரு வாக்கியங்களும் பொருள் **வேறுபடாதவாறு** தனி வாக்கியமாக இணைக்கப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
 **33** සිට **35** තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති (அ) හා (ஆ) වාක්‍ය දෙක අර්ථය **වෙනස් නොවන** සේ තනි වාක්‍යයක් ලෙස නිවැරදිව සම්බන්ධ කර ඇති වාක්‍යය තෝරන්න.
 In each of the questions **33** to **35**, select the sentence that combines the two sentences (அ) and (ஆ) correctly, **without changing** the meaning.

33. (அ) அனோமா பாட்டுப் பாடினாள்.
 (ஆ) அனுராதா நடனம் ஆடினாள்.
 (1) அனோமாவின் பாட்டுக்கு அனுராதா நடனம் ஆடினாள்.
 (2) அனுராதாவின் நடனத்துக்கு அனோமா பாட்டுப் பாடினாள்.
 (3) அனோமா பாட்டுப் பாட அனுராதா நடனம் ஆடினாள்.
 (4) அனுராதா நடனம் ஆட அனோமா பாட்டுப் பாடினாள்.

[பக். 4 ஐப் பார்க்க /4 වැනි පිටුව බලන්න /see page 4

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

34. (அ) குமரன் விரைவாக ஓடினான்.
(ஆ) முதற்பரிசைப் பெற்று மகிழ்ந்தான்.
(1) குமரன் விரைவாக ஓடியும் முதற்பரிசைப் பெற்றும் மகிழ்ந்தான்.
(2) குமரன் விரைவாக ஓடி முதற்பரிசைப் பெற்று மகிழ்ந்தான்.
(3) குமரன் முதற்பரிசைப் பெறுவதற்காக விரைவாக ஓடினான்.
(4) குமரன் விரைவாக ஓடியதால் முதற்பரிசைப் பெற்றான்.

35. (அ) இராமன் இராவணனோடு போர் புரிந்தான்.
(ஆ) இராமன் இராவணனை வென்றான்.
(1) இராமன் இராவணனோடு போர் புரிந்தமையால் இராவணனை வென்றான்.
(2) இராமன் இராவணனை போர் புரிந்தமையால் இராவணனை வென்றான்.
(3) இராமனும் இராவணனும் போர் புரிந்தமையால் இராவணனை வென்றான்.
(4) இராமன் இராவணனோடு போர் புரிந்து இராவணனை வென்றான்.

- **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய **தனிச்சொல்லைத்** தெரிவுசெய்க.
**36** සිට **40** තෙක් ප්‍රශ්නවල දී ඇති ප්‍රකාශ වෙනුවෙන් යෙදිය හැකි **තනි වචනය** තෝරන්න.
In questions **36** to **40**, select the suitable **single word** for the group of words.

36. மா, பலா, வாழை என்பன
(1) முத்தமிழ் (2) முச்சகரம் (3) முக்கனி (4) முச்சக்கரவண்டி

37. ஆயுதம் இல்லாது வெறுங்கையுடன் நிற்பவன்
(1) நிராயுதபாணி (2) நிர்க்கதியானவன் (3) வம்பன் (4) சோம்பேறி

38. தான் பிறந்த நாடு
(1) அந்நியநாடு (2) தாய்நாடு (3) பிறநாடு (4) வறியநாடு

39. ஏழு நாட்களைக் கொண்டது
(1) மாதம் (2) வருடம் (3) பௌர்ணமி (4) வாரம்

40. எளிதாகவும் ஆழமாகவும் மனதிற் பதிவதற்குப் பொருத்தமான உவமை
(1) பசுமரத்தாணி போல
(2) இலைமறை காய் போல
(3) அணை கடந்த வெள்ளம் போல
(4) ஆகாயக் கோட்டை கட்டினாற் போல

* *

[பக். 5 ஐப் பார்க்க /5 වැනි පිටුව බලන්න /see page 5

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**65 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

දෙවන බස - දෙමළ I, II
இரண்டாம் மொழி - தமிழ் I, II
Second Language - Tamil I, II

## இரண்டாம் மொழி - தமிழ் II

* பகுதி **I** இலுள்ள முதலாம், இரண்டாம் வினாக்களையும் பகுதி **II,** பகுதி **III** ஆகியவற்றில் இருந்து ஒரு வினா வீதமும் தெரிவுசெய்து, எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
* **I** කොටසේ අංක 1 හා 2 ප්‍රශ්න ඇතුළුව, **II** හා **III** කොටස්වලින් ප්‍රශ්න එක බැගින් තෝරා ගෙන, ප්‍රශ්න හතරකට පිළිතුරු සපයන්න.
* Answer **four** questions including question **1** and **2** in Part **I** and selecting **one** question from each of Part **II** and Part **III**.

### பகுதி I

**1.** பின்வரும் தலைப்புகளுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **150** சொற்களில் அமையுமாறு ஒரு கட்டுரை எழுதுக.
පහත දැක්වෙන මාතෘකාවලින් එකක් පිළිබඳ ව වචන 150ක පමණ රචනයක් ලියන්න.
Write an essay of about **150** words on any **one** of the following topics.

(i) எமது பாடசாலைக் கலைவிழா
(ii) விவசாயத்தை முன்னேற்றுவோம்
(iii) காட்டு வளத்தைப் பாதுகாப்போம்
(iv) ஆறு தன் கதையைக் கூறல்
(v) தேசிய ஒற்றுமையின் முக்கியத்துவம்

*(20 புள்ளிகள்)*

**2.** 'அ' நிரலில் **தடித்த எழுத்திலுள்ள** சொற்களுக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' நிரலிலுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான வகையில் பூர்த்திசெய்து, உமது விடைத்தாளில் எழுதுக.
පහත දැක්වෙන 'அ' යටතේ ඇති වාක්‍යවල තද කළු අකුරින් ඇති පද සුදුසු පරිදි ගළපා 'ஆ' යටතේ එන වාක්‍යවල හිස්තැන් සම්පූර්ණ කර ඔබේ පිළිතුරු පත්‍රයෙහි ලියන්න.
Fill the blanks in the sentences in 'ஆ' with the suitable form of the words in **thick type** in the sentences in 'அ' and write them in your answer script.

| | அ | ஆ |
|---|---|---|
| (i) | நிமலன் வெற்றிபெற **முயன்றான்.** | சிறுவர்கள் வெற்றி பெற ...................... |
| (ii) | நாம் சுறுசுறுப்புடன் **எமது** வேலைகளைச் செய்தோம். | அவர்கள் சுறுசுறுப்பாக ...................... வேலைகளைச் செய்தனர். |
| (iii) | காற்று வீசும்போது மரம் ஆடி **அசைந்தது.** | காற்று வீசும்போது மரங்கள் ஆடி .................... |
| (iv) | நாம் எல்லோரும் வெவ்வேறு நாடுகளில் **வசிக்கிறோம்.** | நாங்கள் எல்லோரும் வெவ்வேறு நாடுகளில் ............. |
| (v) | மயில்கள் முகிலைக் கண்டதும் தோகையை விரித்து **ஆடின.** | மயில் முகிலைக் கண்டதும் தோகையை விரித்து ...................... |
| (vi) | ஓடிய **நாய்** கிணற்றுள் பாய்ந்தது. | ஓடிய ...................... கிணற்றுள் பாய்ந்தன. |
| (vii) | அப்பா கடைக்குப் **போனார்.** | அப்பாவும் நானும் கடைக்குப் ...................... |
| (viii) | தாத்தா மாங்கன்றை **நாட்டினார்.** | தாத்தாவால் மாங்கன்று ...................... |
| (ix) | அறம் **தெரிந்தவன்** இராமன். | இராமனுக்கு அறம் ...................... |
| (x) | **நான்** பாட்டுப் பாடுவேன். | ...................... பாடத் தெரியும். |

*(20 புள்ளிகள்)*

[பக். 6 ஐப் பார்க்க /6 වැනි පිටුව බලන්න /see page 6

Department of Examinations, Sri Lanka

## பகுதி II

- **3** ஆம் **4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை எழுதுக.
  **3** හා **4** යන ප්‍රශ්නවලින් ඕනෑ ම **එකකට** පිළිතුරු සපයන්න.
  Answer only **one** question from **3** and **4.**

**3.** பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை **25 சொற்களில்** எழுதுக.
පහත සඳහන් කොටසේ අදහස **වචන 25කින්** පමණ සාරාංශ කර ලියන්න.
Write a summary of the following passage in about **25 words**.

எம்மைச் சுற்றியும் சூழ்ந்தும் காணப்படுவது சூழல் ஆகும். பௌதிகச் சூழல், உயிரினச் சூழல், சமூகச் சூழல் என அதை வகைப்படுத்தலாம். நிலம், நீர், வளி ஆகியவற்றைக் கொண்டமைவது பௌதிகச் சூழல். ஓரறிவுடைய தாவரங்கள் முதல் ஐயறிவுடைய விலங்குகள் வரையிலான உயிரினங்களை உள்ளடக்கியது உயிரினச் சூழல். எமது குடும்பத்தினர், சுற்றத்தினர், உறவினர், நண்பர்கள் முதலியோர் சமூகச் சூழலை உருவாக்குகின்றனர்.

சுற்றுப் புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். சூழல் மாசடைவதால் தனிப்பட்ட ஒருவரன்றி முழுச் சமுதாயமுமே பாதிப்புக்குள்ளாகின்றது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் ஆகும். மக்களின் நல்வாழ்வுக்குச் சுற்றுப்புறச் சூழலை மாசடையாமல் பாதுகாக்க வேண்டியது அவசியம். ஆயினும் தற்காலத்தில் சூழல் மாசுபடுதல் காரணமாகப் பெருந்தொகையான மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆட்பட்டு அவதியுறுகின்றனர். *(10 புள்ளிகள்)*

**4.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு உமது மொழிநடையில் **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ පිළිතුරු** ඔබේ වචනවලින් සපයන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences** in your own words.

தூய்மையான காற்று இன்றி உயிர் வாழ முடியாது. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று தற்காலத்தில் மாசுபட்டு வருவதைக் காண்கின்றோம். தொழிற்சாலைகள் பல நச்சு வாயுக்களை வளிக்குள் செலுத்துகின்றன. மோட்டார் வாகனங்கள் கக்கும் புகையும் வளியை மாசுபடுத்துகிறது. அனல்மின் நிலையங்களும் அணுமின் உலைகளும் தொழிற்சாலைகளும் வெளியேற்றும் புகை, தூசு, சாம்பல், கதிர்கள் முதலியன காற்றில் கலந்து அதனைப் பாழாக்குகின்றன. மாசுபட்ட காற்றைச் சுவாசிப்பதால் மக்களின் உடல்நலம் குன்றுகிறது. நச்சுக் காற்றால் தாவரங்களும் விலங்குகளும் உயிரினங்களும் அழிகின்றன.

(i) எது இன்றி உயிர் வாழ முடியாது ?
(ii) எது தற்காலத்தில் மாசுபட்டு வருகின்றது ?
(iii) எவை நச்சு வாயுக்களை வளிக்குள் செலுத்துகின்றன ?
(iv) எவை காற்றைப் பாழாக்குகின்றன ?
(v) மாசுபட்ட காற்றால் ஏற்படும் தீமைகள் **இரண்டு** தருக. *(10 புள்ளிகள்)*

## பகுதி III

- **5** ஆம் **6** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றிற்கு** விடை எழுதுக.
  **5** හා **6** යන ප්‍රශ්නවලින් ඕනෑම **එකකට** පමණක් පිළිතුරු සපයන්න.
  Answer only **one** question from **5** and **6.**

**5.** உடல் நலமற்று மருத்துவமனையில் இருக்கும் நண்பரின் சுகதுக்கம் விசாரித்து **70 - 75** சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

உங்கள் பாடசாலைக் கட்டடத் திறப்புவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டு பெற்றோருக்கு **70 - 75** சொற்களில் ஓர் அழைப்பிதழ் எழுதுக. *(10 புள்ளிகள்)*

**6.** பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களைத் **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය හෝ ඉංග්‍රීසි වාක්‍ය හෝ දෙමළ භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil**.

(i) මගේ මාමා දක්ෂ වඩුවෙකි.
(ii) කරුණාකර මට තේ කෝප්පයක් දෙන්න.
(iii) ගාල්ලට ඊළඟ කෝච්චිය තියෙන්නේ කීයට ද?
(iv) බැංකුවට යන පාර මට පෙන්වීමට ඔබට පුළුවන් ද?
(v) අපේ විදුහල්පතිතුමා උදයෙන් ම පාසලට පැමිණෙයි.

(i) My uncle is a clever carpenter.
(ii) Please give me a cup of tea.
(iii) When will be the next train to Galle?
(iv) Could you show me the way to the bank?
(v) Our principal comes to school early in the morning.

*(10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka